(b) if so, the reasons therefor; and

(c) whether the Government have proposed to open a few more Evening Colleges for Men in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No. The response is satisfactory.

(b) Does not arise.

(c) No.

திரு. வை. சங்கரன் : மதுரையில் இதுபோன்ற கல்லூரி ஆரம்பிக்கும்போது, இருக்கும் இடங்கள் தூரமாக இருப்பதால், கல்லூரி நேரம் சௌகரியமாக இல்லை. ஆகவே, இதற்கு போது மான ஆதரவு இல்லை என்ற தகவல் வந்திருக்கிறதா? அப்படி யானால், போதுமான அவகாசம் கொடுத்து, அவரவர் ஆபீஸ் வேலை நேரம் முடிந்து சுமார் ஒரு மணி நேரம் அவகாசம் கொடுத்து அதற்கேற்ற வகையில் மாலைக் கல்லூரிகள் அமைக்க உத்தேசிக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த ஆண்டு, மதுரை தகுதி யுள்ளதா என்பதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டிய நிமித்தம் ஏற்படவில்லை. மூன்று கல்லூரிகள் முதலில் எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றில் மாலை வகுப்புகள் தொடங் கப்பட்டிருக்கின்றன. மதுரையை எடுத்துக் கொள்வது என்பது பின்னால் அடுத்த ஆண்டில் யோசிக்கப்படவேண்டிய விஷயம்.

திரு. ம. கமலநாதன் : இந்த மாலை நேரக் கல்லூரிகளில் சேர்ந் திருக்கும் அலுவலர்களைப் பொறுத்து, அவர்கள் ஏற்றுக் கொண் டிருக்கும் படிப்பு முடியும் வரையில் அவர்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட மாட்டார்கள் என்ற உறுதி அளிக்கப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்கள் படிப்புப்பற்றிதான் உறுதி. உத்தியோகத்தைப் பற்றி உறுதி இல்லை.

*** 239 கேள்வி.—திரு. கோ. சி. மணி :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:—

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் அரசினர் கல்லூரியில் பட்டப் படிப்புக்கான மாலை நேர வகுப்புகள் துவக்க அரசாங்கத் திற்கு உத்தேசம் உண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

தமிழ்ப் பயிற்சி மொழிக் கல்லூரிகள்

*** 240 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) 1965-66-ம் ஆண்டு வரையில் தமிழ் நாட்டில் எந்தெந்தக் கல்லூரிகளில் தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டம் நடைமுறையில் உள்ளது?